## அளவைப் பிரிவு, நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அளவைப் பிரிவு, நியமனங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறை படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்திற்கு அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் ரூபா 127,343 தொகையான முற்பணங்களை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 139,270,616 தொகையான ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பவைகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, விபரமான பட்டோலை சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை முதலிய சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்தியாகச் சான்றுறுதி செய்ய/ மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | பொதுநிர்வாகச் சுற்றுநிருபம் | |
| | (i) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபம் 2:11 ஆம் உப பிரிவு | நிதியத்தின் வாகனங்களின் நுகரப்பட்ட எரிபொருளின் அளவு ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதில் கடமையாற்றும் காலம் 3 மாதங்கள் உச்ச அளவிற்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2009 மே 05 ஆந் திகதி முன்னாள் பணிப்பாளர் இளைப்பாறியதன் பின்னர் 2013 ஆகஸ்ட் 31 வரை அப்பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. |
| (ஆ) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீ/எப்/437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபம் | நிதியத்திற்கு உரித்தாகும் வகையில் குறித்த காப்புறுதி மேவுகையைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 82,999,417 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 74,972,312 ஆக இருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 8,027,105 அதிகரிப்பாக இருந்தது. முதலீட்டிற்கான வட்டிப் பெறுவனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,613,328 ஆல் அல்லது 667 சதவீதத்தால் அதிகரிப்பதற்குத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(i)(அ) மற்றும் 37 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வியாபாரத்தில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து அளவை உபகரணங்களையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான ஒரு நடைமுறை நிதியத்திடம் காணப்படவில்லை.

(ஆ) மாவட்ட உத்தியோகத்தர்களால் மெய்மையாய்வு செய்யப்பட்ட அலகுகள் மற்றும் அது தொடர்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பாக விபரம் அந்த உத்தியோகத்தர்களால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக முறையான நடைமுறைகள் நிதியத்திடம் காணப்படவில்லை. எவ்வாறாயினும் அந்த அளவீட்டு அலகுகளை பொறியிடுவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய ஆய்வுகூடத்தையும் தலைமை அலுவலகத்தையும் தனியான ஒரு இடத்தில் நிர்மாணிப்பதற்காக 2009 திசெம்பர் 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 09/2671/342/019 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த

போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ஒப்பந்தகாரர்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2013 ஆகஸ்ட் மாதமளவில் இதன் வேலைகள் நடைபெற்றுவருவதாக பணிப்பாளர் காணக்காய்விற்குத் தெரிவித்திருந்தார்.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிடையே ரூபா 5 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் கணனி வலையமைப்பினை நிறுவுவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 மாவட்ட அலுவலகங்களுக்காக மாத்திரம் கணனிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனவே கணனி வலையமைப்பாக்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

நிதியத்தினால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

ஒரு கூட்டிணைந்த திட்டம் இல்லாதிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அது வருடாந்த பாதீட்டுக்குச் சமமாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வானது கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சிற்குச் சொந்தமான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது போதியளவு கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்திற்கும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் இணங்க அது சாத்தியமாகும் வகையில் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் பின்வரும் செலவு விடயங்களின் திருத்திய மதிப்பீடு இறுதித் திருத்தத்தின் போது அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் செலவுகளாகப் பார்க்கும் போதும் முறைப்படியான திட்டமின்றி அவை அதிகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| செலவு விடயங்கள் | | திருத்திய மதிப்பீடு | இறுதித் திருத்திய மதிப்பீடு | உள்ள படியான செலவு | சேமிப்புக்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| 1303 - | காணி கட்டிடங்கள் திருத்தம் | 500,000 | 650,000 | 196,324 | 70 |
| 1401 - | வாகனம் | 20,000 | 1,500,000 | 3,593 | 99 |
| 2001 - | கட்டிடங்கள் திருத்தம் | 6,000,000 | 6,950,000 | 3,220,607 | 54 |
| 2104 - | கட்டிடங்கள் நிர்மாணம் | 341,000,000 | 335,000,000 | 17,303,553 | 95 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது திணைக்களத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) போக்குவரத்துச் செலவுகளும் மேலதிக நேரவேலைச் செலவுகளும்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) வாகனங்களும் எரிபொருள் பாவனையும்